**தெங்கு ஆராய்ச்சி சபை - 2022**
---------------------------------------------

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெங்கு ஆராய்ச்சி சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1971 இன் 46ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சபையின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.அந்நியமங்களின் கீழானஎனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின்உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்குஉள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின்செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின்அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின்வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிகம இலை உதிர்தல் மற்றும் அழுகல் நோய் தடுப்பு செயற்திட்டம், கினியம கலப்பு விதை உற்பத்தி செயற்திட்டம், தென்னை பதப்படுத்தும் பிரிவின் இரண்டு மாடி கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம், ஆகிய செயற்திட்டங்களுக்காக தெங்கு, கித்துள், பனை மேம்படுத்தல் மற்றும் அது | மீளாய்வாணடிற்காக கிடைக்கப்பெற்ற மொத்த கட்டு நிதி அளவில் மூலதன செலவுகளுக்காக கிடைக்கப்பெற்ற கட்டுநிதியின் அளவு நிதி செயலாற்றல் கூற்றிற்கு | நிரல் அமைச்சின் செயற்திட்டத்திற்காக கிடைக்கப்பெற்ற பணம் மற்றும் சர்வதேச தெங்கு சமூகத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற பணம் நிதி |

| | | | |
|---|---|---|---|
| | சார்ந்த கைத்தொழில் பொருட்களின் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சு மற்றும் சர்வதேச தெங்கு சமூகத்தினால் நன்கொடை அளிக்கப்பட்ட ரூபா 285,849,608 மீளாய்வாண்டினுள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் அதில் வருமானங்களாக, வருமானங்கள் செயலாற்று கூற்றுக்கு ரூபா 94,355,348 மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 191,494,260 வேறுபாடு பிழையாக ‘‘செயற்திட்டத்திற்கான மூலதன பங்களிப்பு’’ என்ற பெயரில் கணக்கிற்கு சீர் செய்யப்பட்டிருந்தது. | உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் கூற்றில் வருமானங்களாக அடையாளம் காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் வருடத்தின் மே 16ஆம் திகதி 05 வருடங்களுக்காக இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட 80860157 ஆம் இலக்கமுடைய ரூபா 42,600,000 பெறுமதியான நிலையான வைப்பு 2022 மே 16 திகதி முதிர்வடைந்திருந்ததுடன் அது புதிய நிலையான வைப்பொன்றாக 291-60-01-00014041-6 கீழ் 2022 யூன் 09 திகதி மீண்டும் மக்கள் வங்கியில் முதலிடப்பட்டிருந்தது. அந்த வைப்பு முதிர்வடையும் திகதியான 2022 மே 16 இல் இருந்து 2022 யூன் 08 திகதி வரை சபைக்கு வட்டி வருமானம் ஒன்றை பெற்றுத் தராத நடைமுறை கணக்கில் பணம் வைப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக அந்த காலத்துக்குரிய ரூபா 640,225 மாத்திரம் வட்டி வருமானமொன்று சபை இழந்திருந்தது. ஆத்தோடு, ரூபா 42 மில்லியனுக்கு விசேட வட்டி விகிதம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022.06.08 திகதியில் மக்கள் வங்கியில் முதலிடப்பட்டதன் காரணமாக 2027.05.16 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற வேண்டிய வட்டியில் இழக்கப்பட்டிருந்த வட்டி வருமானமும் குறைக்கப்பட்ட போதிலும் மேலதிகமான வருமானம் ஒன்று நிறுவனத்துக்கு கிடைக்கும். அதன் பிரகாரம், மேற்குறித்த முதலீட்டில் நஷ்டம் ஒன்று ஏற்பட்டிருக்கவில்லை என்பதுடன் மேலதிகமான வருமானமொன்றும் கிடைக்கப்பெற்றிருந்தது. | நிலையான வைப்பு முதிர்வடையும் திகதியில் மீண்டும் முதலிடுவதற்கு திட்டமொன்றை தயாரித்துக் கொள்ள வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| ‘‘வெள்ளை ஈ கிருமி’’ தாக்கத்தின் சேதத்தை அடையாளப்படுத்துவதற்காக 3 ஆராய்ச்சிகள் மற்றும் கிருமித் தாக்கத்தினை கட்டுப்படுத்தல் தொடர்பாக 6 ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவு, ஆராய்ச்சி பெறுபேறுகள் உள்ளடங்களாக ஆராய்ச்சிக்குரிய முக்கியமான ஆவணங்கள் அடங்கிய கோவைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவுகள் மற்றும் ஆராய்ச்சி பெறுபேறுகள் உள்ளடங்கிய கோவைகள். | 2023 ஆம் வருடத்திலிருந்து தொடர்ந்தும் கணக்காய்வு உத்தியோகத்தர்களினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட அறிவுரைகளின் பிரகாரம் ஆவணங்களை தயாரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிப்பதோடு தற்போது ஒரு சில பிரிவுகளின் சேர்த்திட்ட ஆவணங்கள் தயாரிப்பதற்கு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் | அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவுகள், ஆராய்ச்சி பெறுபேறுகள் உள்ளடங்களான ஆராய்ச்சிக்குரிய முக்கியமான கோவைகள் உள்ளடங்கிய ஆராய்ச்சி கோவைகளை தாமதம் இன்றி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட |

| | | |
|---|---|---|
| | | ஏனைய பிரிவுகளின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெங்கு ஆராய்ச்சி சபையில் சேவை புரிந்த சமயத்தில் கல்வி விடுமுறை பெற்றுக்கொண்டு வெளிநாட்டுக்கு சென்ற 6 உத்தியோகத்தர்களினால் சபையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீறி சபைக்கு சேவைக்கு அறிக்கை படுத்தப்படாததன் காரணமாக சபைக்கு அளவிடப்பட வேண்டிய ரூபா 13,582,035 மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சேவை ஒப்பந்தத்தை மீறிய 6 உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | சேவை ஒப்பந்தத்தை மீறுகின்ற உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சபையில் கல்வி விடுமுறையை பெற்றுக் கொண்டு ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மூவர் ஒப்பந்தத்தின் பிரகாரம் கல்வி விடுமுறையை நிறைவு செய்து சேவைக்கு சமூகம் அழித்திருந்த போதிலும் 3 - 4 வருடக்கால சேவையின் பின் அவர்களின் சேவையாற்றப்பட வேண்டிய கட்டாயமான சேவை காலத்தை நிறைவு செய்வதற்கும் முன்னர் சபையின் சேவையிலிருந்து வெளியேறி சென்றிருந்த போதிலும் சபைக்கு அறவிட்டுக்கொள்ளப்பட வேண்டிய ரூபா 36,657,735 பிணைமுறி பெறுமதி அறவிட்டுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சேவை ஒப்பந்தத்தை மீறிய மூன்று உத்தியோகத்தர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சேவை ஒப்பந்தத்தை மீறுகின்ற உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.6.2 முற்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 மற்றும் 2022 ஆம் வருடங்களிலேயே கினியம களப்பு தென்னங்கன்று உற்பத்தி செயற்திட்டத்திற்குரிய சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்கு நாலு சந்தர்ப்பங்களில் ரூபா 3,781,530 முற்பணம் மற்றும் குருநாகல் கால்ஸ்ஃபீல்ட் தோட்டத்தின் கப்சுவைய விதை உற்பத்தி செய்த்திட்டத்திற்குரிய குருநாகல் பெருந்தோட்ட கம்பனிக்கு 05 சந்தர்ப்பங்களில் ரூபா 16,631,962 முற்பணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியான போதிலும் | 2022ஆம் வருடத்தில் நிலவிய எரிபொருள் இடர்பாடுகள் மற்றும் ஏனைய வழங்கள் தொடர்பாக காணப்பட்ட இடர்பாடுகளின் காரணமாக இந்த பணிகளை நிறைவு செய்வதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக 2022 டிசம்பர் 31 திகதியில் தீர்வு செய்வதற்கு முடியாது போனது. ஒரு முற்பணத்தை தீர்ப்பதற்கு முன்னர் மீண்டும் அந்த காரியத்திற்காக முப்பனத்தை பெற்றுக் கொடுப்பதற்கு | களப்பு தென்னங்கன்று உற்பத்தி செயற்திட்டத்தை வெற்றிப்பாதையில் கொண்டு செல்வதோடு பெற்றுத்தரப்பட்ட முற்பணங்களை தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

அந்தப் பணிகள் நிறைவு செய்யப்படாதிருந்ததுடன் அவ்வப்போது பெற்றுக் கொடுக்கப்பட்ட எந்த ஒரு முற்பனமும் தீர்க்கப்படுவதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. ஆரம்ப முற்பணத்தை தீர்ப்பனவு செய்யப்படாமல் இந்த நிறுவனங்களுக்கு மீண்டும் மீண்டும் முற்பணங்களை பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. காரணமாக இருந்தது அந்த பணிகளை நிறைவு செய்வதற்கு தேவையான மொத்த பணம் இரண்டு சந்தர்ப்பங்களிலே அமைச்சினாள் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டதனாலேயாகும்.

**1.7 சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணம் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் அவதானம் | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக்கோவை<br>(i) XIX ஆம் அத்தியாயத்தின் 5.3 ஆம் பிரிவு | அரசின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான வாடகை திருமணமான உத்தியோகத்தரின் சம்பளத்தில் நூற்றுக்கு 10 மற்றும் திருமணமாகாத உத்தியோகத்தரிடமிருந்து சம்பளத்தில் நூற்றுக்கு 5 அளவில் உள்ள போதிலும் சபையின் பதவி அணியினரின் 21 நபர்கள் பாவனைக்குட்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக எவ்வித வாடகை ஒன்றும் அறவிடப்படாதிருந்தது டன், 59 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஊழியர்களின் மாதாந்தம் அறவிடப்பட்ட வாடகை ரூபா 50 கும் ரூபா 160 கும் இடையிலாகும். | தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் இல்லங்கள் அரச உத்தியோகபூர்வ இல்லங்களாக கணிக்கப்படாததுடன் அவை தோட்ட இல்லங்களாக நிர்மாணிக்கப்பட்டவையாகும். ஆராய்ச்சி மற்றும் வெளிகளம் சார்ந்த நடவடிக்கைகள் சாதாரண கடமை ஒன்றாக கடமை நேரத்தினுல் நிறைவு செய்யப்பட முடியாததுடன் அந்தக் கடமை அத்தினத்தின் 24 மணித்தியாலத்திற்குள் எந்த ஒரு நேரத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டியதாகும். அதனால் உள்ளக சுற்று நிறுபமொன்றான 13/2018 இலக்க சுற்று நிறுபத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக பணிப்பாளர், பிரதி பணிப்பாளர்கள், சிரேஷ்ட கணக்காளர், ஆராய்ச்சி பிரிவுகளின் பிரிவு தலைவர்கள், முகாமையாளர்கள் (தோட்டம்) அத்தியச்சகர்கள் பண்டிருப்புத் தோட்டத்தின் மேலதிக உத்தியோகத்தர் மற்றும் தலைவரின் செயலாளர் ஆகியோர்களுக்காக உத்தியோகபூர்வ இல்ல வாடகை அறவிடுவதில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகபூர்வ இல்ல உத்தியோகத்தர்களின் ஒவ்வொரு வகுப்புக்களின் பிரகாரம் சலுகை அடிப்படையிலான வாடகை அறவிடப்படுகிறது. | தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்துக்கு பொருந்தும் வகையில் செயற்பாட்டு கை நூலொன்று தயாரிக்கப்பட்டு திரைசேறியின் அங்கீகாரம் பெற வேண்டியதுடன் உரிய அங்கீகாரம் கிடைக்கும் வரையும் தாவன கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க கடமைகளை நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு | (i) உத்தியோகபூர்வ இல்லங்களின் நீர் கட்டணங்கள் உரிய உத்தியோகத்தினால் செலுத்தப்பட வேண்டிய போதிலும் சபையின் உத்தியோகபூர்வ இல்லங்களில் வசிப்பவர்களினால் அவர்களின் தனிப்பட்ட பாவனைக்கான நீர் கட்டணங்களும் மற்றும் சபையின் நீர் பயன்பாடுகளும் உள்ளடங்களான மீளாய்வாண்டின் ரூபா 3,115,592 சபையினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் இல்லங்கள் தோட்ட இல்லங்களாக சேவையின் தேவைபாட்டின் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதோடு அந்த இல்லங்களுக்கான நீர்மானிகள் வெவ்வேறாக பொருத்தப்பட்டு இருக்கவில்லை. உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு ஒரே நீர் கட்டண சிட்டு பெறப்படுவதுடன் குடியிருப்பாளர்களிடமிருந்து நீர் பயன்பாட்டுக்காக செலவுகள் அறவிட்டுக் கொள்வதற்கு முடியாது உள்ளது. | தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்துக்கு பொருந்தும் வகையில் செயற்பாட்டு கை நூலொன்று தயாரிக்கப்பட்டு திரைசேறியின் அங்கீகாரம் பெற வேண்டியதுடன் உரிய அங்கீகாரம் கிடைக்கும் வரையும் தாவன கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க கடமைகளை நிறைவேற்றப்பட வேண்டும். |
| | (ii) உத்தியோகபூர்வ இல்லங்களின் மின் கட்டணங்கள் உரிய உத்தியோகத்தர்களால் செலுத்தப்பட வேண்டிய போதிலும் உத்தியோகத்தர்கள் உரித்தாகும் வகுப்புக்கு ஏற்ப மின் கட்டணங்கள் 56.25 இலிருந்து 150 அலகுகள் வரையான கட்டணங்களை செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 29 உத்தியோகத்தர்களுக்காக முழுமையான மின் கட்டணங்கள் உத்தியோகத்தர்க | தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக வேறாக கட்டண சிட்டி ஒன்று கிடைக்கப்பெறாதுடன் ஒட்டுமொத்த நிறுவனத்துக்கும் ஒரே ஒரு பில் கட்டண சீட்டை மாத்திரமே கிடைக்கப் பெறுகின்றது. சேவையின் தேவைபாட்டின் அடிப்படையில் இந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் பெற்றுக் கொடுக்கப்படுதல் மேற்கொள்ளப்படுவதுடன் உள்ளக சுற்றுநிருப இலக்கம் 13/2018 இன் பிரகாரம் ஒவ்வொரு வகுப்புக்கும் உரிய அந்த அந்த வகுப்புக்கு ஏற்ப சலுகை அடிப்படையாகக் கொண்டு வரையறைக்கு மேலதிகமாக உபயோகிக்கப்படுகின்ற மின் அலகு அளவிற்கு நிறுவனத்தினால் அலகுகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்துக்கு பொருந்தும் வகையில் செயற்பாட்டு கை நூலொன்று தயாரிக்கப்பட்டு திரைசேறியின் அங்கீகாரம் பெற வேண்டியதுடன் உரிய அங்கீகாரம் கிடைக்கும் வரையும் தாவன கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க கடமைகளை நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ளிடமிருந்து விடுவிக்கப்பட்டு சபையினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் ஜனவரி முதல் நவம்பர் வரையான உத்தியோகத்தர்களின் தனிப்பட்டமின் கட்டணங்கள் ரூபா 1,740,200 சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2022 சனவரி 20ஆம் திகதிய தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபையின் 04/2022ஆம் இலக்க சுற்றுநிருபம் | 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டுள்ள ரூபா 24,736,650 மாடுகள் ஆடுகள் போன்ற உயிரியல் சொத்துக்கள் மதிப்பிடும்போது உபயோகிக்கப்படுகின்ற சுற்று நிறுபத்தின் பிரகாரம் அந்த உயிரினங்களின் கர்ப்பத்தன்மை, ஒரு நாளைக்கு உண்டான உற்பத்தி சாதாரண பாலின் அளவு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு அதற்குரிய ரேட்டை பயன்படுத்த வேண்டிய போதிலும் அந்த உயிரினங்களின் நிறையை மாத்திரம் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. அதனால் உயிரியல் சொத்துக்களின் பெறுமதி குறை மதிப்பிடப்பட்டுள்ளது. | உயிரியல் சொத்துக்களை கணக்கிடும் போது தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபையின் ஊடாக விநியோகிக்கப்பட்ட புதிய சுற்றுநிருபம் 04/2022ஆம் இலக்கத்தின் கீழ் சரியாக 2023 ஆம் வருடத்தில் கணக்குகளில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியாண்டிற்குரிய சுற்று நிறுபம் மற்றும் ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு உயிரியல் சொத்துக்கள் கணிப்பிடப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |

### 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பிரதான நோக்கம் தேசிய தெங்கு உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் அதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ஆக இருந்த போதிலும் 2019 மற்றும் 2021 ஆம் வருடங்களிலே 02 சந்தர்ப்பங்களில் நிதி நெருக்கடிகள் காரணமாக ஆராய்ச்சிகள் நிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும், 2022 ஆகஸ்ட் 25 திகதி 117/2022 ஆம் இலக்க பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 202,800,000 இலங்கை வங்கி தன்கொட்டுவ கிளை சேமிப்பு கணக்கில் வைப்பு செய்யப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஆராய்ச்சி மற்றும் மரபணு மத்திய வள நிலையங்களின் வருமானத்தின் மூலம் ஆராய்ச்சிக்காக மேலும் பணத்தை பெற்றுக் கொள்ளாததுடன் உரிய அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படும் வரை அந்த பணம் முதலீடொன்றாக சேமிப்பு கணக்கொன்றில் வைத்து செய்யப்பட்டுள்ளது. மேலும், 2023 ஆம் வருடத்திலே இந்த தோட்ட நிதியத்தின் ரூபா 83.3 மில்லியன் ஆராய்ச்சி செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | ஆராய்ச்சி நடவடிக்கைகளுக் காக முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 110,832,662 மிகையாக இருந்ததுடன் அதற்கிணங்க முன்னைய ஆண்டின் மிகை ரூபா 151,245,792ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவில் ரூபா 40,413,130 பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவுக்கு முன்னைய ஆண்டிற்கு இனையாக மீளாய்வாண்டில் மரபணு மத்திய வள நிலையங்கள செலவினம் ரூபா 145,201,161 ஆல் மற்றும் ஏனைய செலவினம் ரூபா 100,583,250 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை சொத்துக்களின் விகிதம் மற்றும் துரித சொத்துக்களின் விகிதம் முறையே 2.8 : 1 மற்றும் 2.1 : 1 ஆனதுடன் முன்னைய ஆண்டின் அந்த விகிதங்கள் முறையே 1.9 : 1 மற்றும் 1.3 : 1 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஆம் வருடத்தில் இருந்து 2022 ஆம் வருடம் வரையான காலப்பகுதிக்குள் சபையின் 7 பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த 14 ஆராய்ச்சிகள், ஆராய்ச்சி உத்தியோகத்தரினால் சேவையை கைவிடுதல், நிதி ஏற்பாடுகள் இல்லாமை, காட்டு யானைகளினால் சேதம் ஏற்படுதல், மின் உற்பத்திக்கான கிலிரிசீடியா தண்டுக்கான கேள்வி குறைவடைதல் மற்றும் கிலிரிசீடியா பயிரிடுதல் குறைவடைதல் போன்ற காரணங்களின் | உத்தியோகத்தர் சேவையை கைவிடுதல், நிதி ஏற்பாடுகள் இல்லாமை, காட்டு யானைகளினால் சேதம் ஏற்படுதல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஆராய்ச்சிகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. | ஆராய்ச்சியை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதன் திறன் மற்றும் வல்லமை தொடர்பான ஆரம்ப ஆய்வு ஒன்றை மேற்கொண்டு அதன் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகளை திட்டமிடுவதன் மூலம் பொருளியலற்ற செலவுகளை குறைத்துக் |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதியில் கைவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்டுள்ள ரூபா 11,375,320 பொருளியலற்ற செலவாக கணக்காவின்போது அவதானிக்கப்பட்டது. | | கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் தென் மாகாணத்தின் 294 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குரிய தென்னை இலை வாடுதல் மற்றும் அழுகுதல் நோய் தொடர்பான பரிசீலனை 2008 ஆம் வருடத்திலிருந்து 5 கட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டு 14 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 114கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பரிசீலனை நடவடிக்கைகள் நிறைவடைந்திருக்க வில்லை. அவ்வாறு நோய் கட்டுப்பாட்டுக்காக ‘‘நோய் வளையத்தின் உள் நோய் அறிகுறிகளை காட்டுகின்ற அனைத்து தென்னை மரங்கள் மற்றும் கன்றுகளை வெட்டி நீக்குதல்’’ மேற்கொள்ளப்படுவதுடன் 2013 ஆம் வருடத்திலிருந்து 2022ஆம் வருடம் வரை 3,193 எதிர்த்து நிற்றல் கலப்பு தென்னம் கன்றுகள் சிறிய தொகையொன்று மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இரசாயன பொருட்களின் பயன்பாடு தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை உரிய ஆராய்ச்சிகள் நிறைவடைந்திருக்க வில்லை. | ஐந்தாம் கட்டம் 2020 வருடத்தின் ஏப்ரல் மாதத்திலே ஆரம்பிக்கப்பட்டதுடன் 2020 மற்றும் 2021 வருடங்களில் நிலவிய கொரோனா தொற்று நிலைமை மற்றும் 2022ஆம் வருடத்தில் காணப்பட்ட எரிபொருள் நெருக்கடி நிலைமையின் கீழ் வெளிக்களப் பரிசீலனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதற்கு தடைகள் ஏற்பட்டதாக அறியத்தருகிறேன். அதனால் ஐந்தாம் கட்ட பரிசீலனைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் திட்டமிட்டதன் பிரகாரம் நிறைவு செய்வதற்கு முடியாது போனது. பாதுகாப்பு வளையத்தினுள் ஐந்தாவது கட்டத்தில் எஞ்சியுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நோயுள்ள மரங்களை அடையாளப்படுத்தல் மற்றும் நீக்குதல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. | வெளிகாகம் தென்னை இலை வாடுதல் மற்றும் அழுகுதல் நோய் தொற்றியுள்ள மரங்களுக்கான தேவையான சிகிச்சைகளை மேற்கொள்ளுதல், எதிர்த்து நிற்கும் கன்றுகளை அறிமுகப்படுத்தல் மற்றும் இரசாயன பொருட்களின் பாவனை தொடர்பான ஆராய்ச்சிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் 2008 ஆம் வருடத்தில் இருந்து 2022 ஆம் வருடம் வறையான காலத்தில் தென் மாகாண தென்னை இலை அழுகுதல் மற்றும் இலை வாடுதல் நோய் பரிசீலனைக்காக தற்காலிகமாக 4 கும் 24கும் இடையிலான அளவில் சேவைக்கு துறை சார் பரிசீலனை உத்தியோகத்தர்களை | கூடுதலான வெளிக்கள பரிசோதகர்கள் எண்ணிக்கையொன்றை மற்றும் அரச அபிவிருத்தி உத்தியோர்கத்தர்களை ஈடுபடுத்தி இந்த நோயில் உள்ள மரங்களை அடையாளம் இடுவது மற்றும் நீக்கும் வேலைத்திட்டத்தினை துரிதமாக்குவதற்கு 03 வருடத்திலான செயற்பட்ட | போதுமான உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி நோய் பரிசீலனை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு செயற்திட்டத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | ஆட்சேர்த்து சேவை பிரிவிற்கு கீழ் 6 மாதங்களுக்கு ஒரு முறை சேவை நீடிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த அளவு 3 மாவட்டங்களில் 294 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை நிரப்புவதற்கு போதுமானதாக இல்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | முன்மொழிவு ஒன்று 2021 ஆம் வருடத்திலேயே அமைச்சுக்கு முன்வைத்ததுடன் அதற்காக நிதி ஏற்பாடுகள் கிடைக்காதுடன் இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கூடுதலான வெளிக்கள பரிசோதகர்கள் ஈடுபடுத்தி கொள்வதற்கு பல வருடங்களாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதற்காக முகாமைத்துவ சேவை தினைகளத்திடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்கப்பெறவில்லை. | வேண்டும். |
| (இ) | தென்னையிலே வாடுதல் மற்றும் இலை அழுகுதல் நோய்க்கு தென்னை மரங்களுக்கு தடுப்பூசி இடுதல் அல்லது மரங்களை வெட்டி நீக்குதல் தவிர அந்த நோய்க்கு தாக்குப் பிடிக்க கூடிய எதிர்த்து நிற்கும் கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு கூடுதலான கவனம் ஒன்றை செலுத்த வேண்டிய போதிலும் உரிய கைச்செய்கை மூலமான மகரந்த செயற்பாடு வேலை திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய ஊழியரின் ஒப்பந்த காலம் 2020 அக்டோபர் மாதத்தில் இருந்து நிறைவடைவதன் அடிப்படையில் எதிர்த்து நிற்கும் கன்றுகளை உற்பத்தி செய்யக்கூடிய செயல்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தது. | வெளிகாமம் நோய்க்கு எதிர்த்து நிற்கும் கலப்பு தென்னை தயாரிக்கும் ஆராய்ச்சிக்கு ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட கைச்செயின் மூலமாக மகரந்த செயற்பாடு ஊழியரின் ஒப்பந்த காலம் 2020.10.31 ஆம் திகதியில் நிறைவடைந்ததுடன் அந்த ஊழியருக்காக சேவை நீடிப்பு பெற்றுக் கொள்வதற்கு 2020.07.23 ஆம் திகதியில் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கோரிக்கையொண்டு கொடுக்கப்பட்ட போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. மீண்டும் 2020.09.15 ஆம் திகதி எங்களினால் காரணங்கள் குறிப்பிடப்பட்டு மீண்டும் வேண்டுகோளொண்டு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதற்காக பதில் ஒன்று கிடைக்கப்பெறவில்லை. அதனால் கைச்செய்கை மூலமான மகரந்த செயற்பாட்டு வேலைதிட்டம் 2020.10.31 திகதியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. | கைச்செய்கை மூலமாக மகரந்த செயற்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்தி எதிர்த்து நிற்கும் கன்றுகளை உற்பத்திகளை அதிகரித்துகொல்லபடல் வேண்டும். |
| (ஈ) | தென்னை பயிர் செய்கை சபைக்கு உரிய வெளிகமயில் அமைந்துள்ள 15 ஏக்கர் நிலப் பிரதேசம் 2016 டிசம்பர் 20 ஆம் திகதியிலிருந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் 10 வருட காலப்பகுதிக்காக சபைக்கு பெற்றுக் | தென்னை பயிர் செய்கை சபைக்குரிய 15 ஏக்கர் பூமி பிரதேசத்தில் தென்னை பயிற் சைய்கைக்கு பொருத்தமான நிலையில் 5 ஏக்கர் பூமி பிரதேசம் மாத்திரமே காணப்பட்டது. அதன் பிரகாரம் தற்போது இந்த தோட்டத்தின் தென்னை | தென்னையிலே வாடுதல் மற்றும் அழுகுதல் நோய்க்கு தாக்குப் பிடிக்கக் கூடிய எதிர்த்து நிற்கக்கூடியதுமான கன்று உற்பத்திகளை அதிகரித்து போதுமான |

| | | | |
|---|---|---|---|
| | கொடுக்கப்பட்டிருந்ததுடன் வெளிகம தென்னையிலை வாடுதல் மற்றும் இலை அழுகுதல் நோய்க்கு தாக்குப் பிடிக்கக் கூடிய எதிர்த்து நிற்றல் புதிய கலப்பு கன்று தளமாக இந்த பூமி பிரதேசத்தை விரிவுபடுத்தல் அதன் நோக்கமாக இருந்த போதிலும் 2013ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டு வரையான 9 வருட காலத்துக்குள் 3,193 கன்றுகள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகள் மற்றும் தென்னை பயிற் செய்கை சபைக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | பயிர்செய்கைக் காக பொருத்தமான 5 ஏக்கர் பூமி பிரதேசத்தினை உச்ச பயன் பெறக்கூடிய வகையில் தாய் மரமாக இலை குந்திரா பயிர் செய்யப்பட்டு மகரந்தச் சேர்க்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அளவு தென்னை மரங்களை மீண்டும் பயிரிட வேண்டும். |
| (உ) | சபையின் ஆராய்ச்சி பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளாக பல்வேறு கண்டுபிடிப்புகள் மற்றும் அறிவுரைகள் குறித்த உத்தியோகத்தர்களினால் எழுத்து மூலமாக பெற்றுக் கொடுக்கப்படாததுடன் தகவல் தொழில்நுட்ப பரிவர்த்தனை பிரிவிற்கு வாய்மொழி மூலமாக ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் தகவல் தொழில்நுட்ப பரிவர்த்தனை பிரிவு ஆலோசனைகள் வெளியீடுகளை வெளியிடுதல், மின்னணு ஊடகங்கள் மூலம் ஆலோசனைகளை வழங்குதல், கலந்துரையாடல்களை நடத்துதல் ஆகியன மேற்கொள்ளப்பட்ட போதிலும் உரிய கண்டுபிடிப்புகள் தொடர்பான ஆரம்ப சாட்சிகள் ஆராய்ச்சி பிரிவிடம் காணப்படவில்லை. அந்த ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் தொடர்பாக வெளிவாரியான மீளாய்வொன்றும் 2019 வருடத்திற்கு பிறகு இடம்பெற்றிருக்கவில்லை. | 2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களிலே காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமை காரணமாக வெளிவாரி தரப்பினர்களை நிறுவனத்திற்கு அழைத்து வருதல் கடினமான ஒன்றாக காணப்பட்டதுடன் ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் தொடர்பாக மீளாய்வொன்றும் மேற்கொள்வதற்கு முடியாது போனது. 2022 ஆம் வருடத்தில் நிலவிய எரிபொருள் மற்றும் நிதி நெருக்கடி காரணமாக ஆராய்ச்சி மீளாய்வொன்றை மேற்கொள்வதற்கு முடியாது போனது. உள்ளக மீளாய்வொன்று மாத்திரம் இடம் பெற்றது. 2023 ஆம் வருடத்திலே வெளிவாரி மேளாய்வொன்றை மேற்கொள்வது 2023 ஜுலை 5ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள், கண்டுபிடிப்புகள் மற்றும் ஆலோசனை எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருதல் மற்றும் உள்ளக மற்றும் வெளிவரியான மீளாய்வுகள் ஊடாக ஆராய்ச்சிகளை மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் பணிகளுக்கு இடையில் பிரதானமான பணி ஒன்றாக தென்னை | கொரோனா தொற்று நிறைவடைந்து | அறிமுகப்படுத்தப்பட்ட ஆராய்ச்சிகள் இயற்கை பரிகாரத்தை |

| | | | |
|---|---|---|---|
| | பயிர்செய்கை தொடர்பான மேலதிக விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், நோய் மற்றும் கிருமித் தொற்றை தடுத்தல் மற்றும் குணப்படுத்தல், ஆனபோதும் 2019 ஆம் வருடத்தின் இறுதிப் பகுதியில் தென்னை பயிர்சிக்கு ஏற்பட்ட ''வெள்ளை ஈ'' கிருமித்தொற்றை கட்டுப்படுத்துவதற்காக 2022 ஆம் வருடம் வரைக்கும் நிலையான தீர்வொன்று கண்டுபிடிக்கப்படாமையால் 9 மாவட்டங்களுக்குரிய 127 பிரதேச செயலாளர் கோட்டங்களில் 50 கோட்டங்கள் இந்த கிருமித் தொற்றின் காரணமாக கடுமையாக பாதிப்பிற்குள்ளானதன் பின்னர் வேப்பெண்ணெய், சவர்க்காரத்தூள் கலவையொன்று 2022 இறுதி பகுதியாகும் போது அடையாளம் காணப்பட்டிருந்தது. | மேற்கொள்வதற்கு பொருத்தமான நிலையொன்று ஏற்பட்டவுடன் உடனடியாக மீண்டும் ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அந்த ஆராய்ச்சிகளின் பெறு பேறுகளின் அடிப்படையில் 2022ஆம் வருடத்தில் இயற்கை மூலிகை பூச்சிக் கொல்லிகள் பரிந்துரைக்கப்பட்டது. மேலும் அந்த ஆராய்ச்சிகள் ஒரு வருடத்தை விட குறைந்த காலத்திற்குள் நிறைவு செய்யப்பட்டு பரிந்துரைகள் வெளியிடப்பட்டுள்ளன. | பயன்படுத்தி வெள்ளை ஈ நோயை கட்டுப்படுத்தும் முன்னேற்றம் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு நோய் கட்டுப்பாடு மற்றும் ஒழிப்புக்கு தேவையான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் ''வெள்ளை ஈ'' ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக தென்னை பயிர்செய்கை சபையுடன் 3 பிரதேச செயலாளர் கோட்டங்களில் மாத்திரம் 81,176 தென்னை மரங்கள் ஒழிப்பு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி கிருமித்தொற்றை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் இந்த நோய் பரவியுள்ளதாக அறிக்கை படுத்தப்பட்டுள்ள எஞ்சிய 124 பிரதேச செயலாளர் அலுவலகங்களில் இந்த கிருமி தொற்றை ஒழிப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு முடியாது போயிருந்தது. | செயல்திட்டத்தின் ஊடாக இவ்வாறான பெரிய அளவிலான பூச்சிக்கொல்லிகள் தெளித்தலின் சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அது வெற்றியளித்துள்ளதாக எங்களுடைய அவதானத்தின் பிரகாரம் தெளிவாகியுள்ளது. இவ்வாறான முறையில் கிருமி தொற்றை ஒழித்தல் அரச நிறுவனங்களின் ஒன்று அல்லது இரண்டில் மாத்திரம் மேற்கொள்ள முடியாது. அதற்காக பொதுமக்களின் உற்சாகமான பங்களிப்பு தேவை என்பதுடன் அதற்காக தேவையான நடவடிக்கைகள் மற்றும் வசதிகள் தென்னை பயிர்செய்கை சபையினூடாக தயாரிக்கப்பட்டுள்ளது. | காணப்படுகின்ற நிலைமையினை முகாமைத்துவம் செய்து நோயைய் கட்டுப்படுத்தி அல்லது ஒழிப்புக்காக தேவையான பரிகாரங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | தென்னை மரங்களில் இலை வாடுதல் மற்றும் அழுகுதல் நோயை கட்டுப்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்டிருந்த ஒரே ஒரு முறையான நோயுள்ள மரத்தை கழற்றி நீக்குதல் என்பதாயிருந்த போதிலும் நோய் காணப்படுகின்ற காலி, மாத்திரை, அம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களின் 2022 ஆம் வருடத்தில் அடையாளமிடப்பட்ட 3,263 மரங்களில் நீக்கப்படாத 1,469 மரங்கள் தொடர்ந்தும் காணப்படுதல் நோயை | 2022 ஆம் வருடத்திலே நாட்டினுள் நிலவிய எரிபொருள் பற்றாக்குறை காரணமாக நோயுள்ள மரங்களை அடையாளப்படுத்தி நீக்கும் நடைமுறையில் தடைகள் ஏற்பட்டு மரங்களில் அடையாளப்படுத்தும் மற்றும் நீக்குதலில் ஒரு சிறிதளவு தாமதம் ஒன்று ஏற்பட்டது. அத்தோடு, 2023.06.30 திகதியாகும் போது பாதுகாப்பு | நோய் பரவுதலை தடுப்பதற்கு முறையான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாத ஒழிப்பதற்கு தடை ஒன்றாக மற்றும் நோய் மேலோங்குவதற்கு காரணமாய் உள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | வளையத்தினுள் வெழிகாமம் நோய் அறிகுறிகளை காட்டுகின்ற அனைத்து தென்னை மரங்களையும் நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | குருநாகலை பெருந்தோட்ட கம் பனிக்கு உரித்தான குருநாதர் கால்ஸ்.்.பீல்ட் தோட்டத்தின் 75 ஏக்கர் நிலப்பிரதேசத்தினுள் கலப்பு விதை தென்னை பூங்கா ஒன்று நிறுவுவதற்காக தென்னை ஆராய்ச்சி சபை மற்றும் குருநாதரை பெருந்தோட்ட கம்பனிக்கிடையில் 2021 செப்டம்பர் 29 ஆம் திகதி 2021-2023 காலப்பகுதிக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றுக்கு உடன்பட்டிருந்தது. இரு தரப்பினரும் உடன்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 2022ஆம் வருடத்திலும் இலங்கை உயரமான தென்னை மற்றும் இலங்கை கபில குந்திரா தென்னை வகையை சேர்ந்த மரங்களை பயன்படுத்தி கலப்பு தென்னை விதை கன்றுகள் 2,150 தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வு திகதிமான 2023 ஏப்ரல் 26ஆம் திகதி வரை இலங்கை உயரமான தென்னை கன்றுகள் 1,247 மாத்திரம் விதை தென்னை தோப்பில் நடப்பட்டிருந்தது. இலங்கை கபில குந்திரா கன்று நடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் சபையினால் எவ்வித கபில குந்திரா கன்றுகளும் குருநாகளை பெருந்தோட்ட கம்பனிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 மே மாதம் ஆகும்போது 2037 உயர தாய் கன்றுகள் மற்றும் 81 கபில குந்திரா கன்றுகள் கால்.்.பீல்டு விதை தென்னை தோப்பில் நடப்பட்டுள்ளது. 2023 டிசம்பர் ஆகும்போது மேலும் கைச்செய்கை மூலமான மகரந்த செயற்பாட்டுக்குட்பட்ட 640 உயர கன்றுகள் நடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் கலப்பு விதை தோப்பை நிர்மாணித்தல், மரங்களை நடுதல், கன்றுகளை தயாரித்தல், உரிய வசதிகளை வழங்குதல் மற்றும் அந்த நடவடிக்கைகள் தொடர்பாக முறையான மேற்பார்வை ஒன்றின் உடனான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | குருநாகலை பெருந்தோட்ட கம்பனிக்கு உரித்தான குருநாகளை கால்.்.பீல்டு கலப்பு தென்னை விதை தோப்பிற்காக நீர் வழங்குவதற்கு குழாய் நீர் செயற்திட்டம் ஒன்று ஆரம்பிப்பதற்கு 2022 பிப்ரவரி 7 ஆம் திகதி மதிப்பிடப்பட்ட மொத்த பெறுமதியான ரூபா 10,986,882 தொகை முற்பணமாக குருநாகலை பெருந்தோட்ட கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. குழாய் கிணறு செயற்திட்டம் 2022 அக்டோபர் மாதத்தில் அவ்வாறானில் முற்பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டு 08 மாதங்களுக்கு பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2023 ஏப்ரல் 26 ஆம் திகதியாகும் போது ஒரு வருடத்திற்கு அதிகமான காலம் | கால்ச்.்.பீல்ட் தோட்டத்தின் தென்னை விதை தோப்பை சுற்றி வேலி நிர்மாணிக்கும் பணிகள் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 2022 ஏப்ரல் மாதத்தின் பின்னர் ஏற்பட்ட எரிபொருள் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு முடியாது போனது. விசேடமாக நிலவிய சீமைந்து மற்றும் எரிபொருள் பற்றாக்குறை இந்த பணிகளின் தாமதத்துக்கு பெரிதும் தாக்கம் செலுத்தி வந்தது. | முறையான மேற்பார்வை ஒன்றுடன் ஆன கலப்பு தென்னை விதை சேத்திட்டத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதன் நோக்கம் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சபைக்கு உரித்தான மரபணு மத்திய வள நிலையங்கள் இந்த பணிகள் நிறைவேற்றப்படுவதில் உள்ள வல்லமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். |

கடந்திருந்த போதிலும் செயற்த்திட்டத்தின் பணிகள் தொடர்பான முறையான மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதனால் போதுமான அளவு முன்னேற்றம் ஒன்று பெறப்பட்டிருக்கவில்லை. அத்தோடு, அந்தத் தோட்டத்தின் வேலி பொருத்துவதற்காகவும் சபையினால் ரூபா 4,688,000 செலவிடப்பட்டு இருந்ததுடன் தெங்கு ஆராய்ச்சி சபைக்கு உரித்தான 10 மரபணு மத்திய வள நிலையங்கள் காணப்பட்ட போதிலும் இந்த மரபணு மத்திய வள நிலையங்களில் இந்த பணியை நிறைவேற்றும் திறனும் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பது கணக்காய்வின் போது கவனிக்கப்பட்டது.

## 3.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் தாவர உடலியல் விஞ்ஞான பிரிவின் சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஒருவரினால் “புவி வெப்பமாதல் அதிகரித்தல் மற்றும் வரச்சியின் தாக்கம் இலங்கை தென்னை கைத்தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் முறைகள் மதிப்பிடுதல்” என்ற தலைப்பின் கீழ் ஆராய்ச்சி ஒன்று மேற்கொள்வதற்கு 2021 டிசம்பர் 28ஆம் திகதி பண்டரிப்பு ஆராய்ச்சி மத்திய வல நிலையத்தில் 12 என்க்கோன கல்வனை ஆராய்ச்சி கூடங்களை அமைப்பதற்காக ரூபா 1,098,000 செலவிடப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது. ஆரம்ப பணிகளை ஆரம்பித்ததன் பின்னர் ஆராய்ச்சியை தொடங்கிய உத்தியோகத்தர் 2022 பிப்ரவரி 28ஆம் திகதி சபையின் சேவையை விட்டு வெளியேறியதனால் வேறொரு உத்தியோகத்தர் ஒருவருக்கு அந்த ஆராய்ச்சிக்குரிய தேவையான அறிவு இல்லாததுடன் ஆராய்ச்சிகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் தயாரிக்கப்பட்ட 12 கூடங்களும் பண்டரிப்பு தோட்டத்தில் காடாக மாறியுள்ளதுடன் அந்த நிதி புரளியலற்ற செலவு ஒன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஆராய்ச்சியை திட்டமிட்ட உத்தியோகத்தர் தேசிய ஆராய்ச்சிகள் சபையினால் ஏற்பாடாக இருந்த ஆராய்ச்சியின் பிரதான ஆராய்ச்சியாளராக (Principal Investigator) நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அவர் இதை பட்டப் படிப்பை தொடர்கின்ற சமயத்தில் பெற்றுக் கொண்ட அறிவின் அடிப்படையில் திட்டமிடப்பட்டதொன்றாகும். அவ்வாறான விசேட பயிற்சியுடன் பயிற்சியின் உடனான ஆராய்ச்சி உத்தியோகத்தொருவர் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தில் இல்லாததிருந்ததுடன் ஆராய்ச்சி வேறொரு ஆராய்ச்சி உத்தியோகத்தருக்கு அதன் முழுமையான பொறுப்பை ஏற்படுத்திக் கொண்டு செயல்படுத்தக்கூடிய வல்லமை காணப்படவில்லை. | ஆராய்ச்சி உத்தியோகத்தர் சபையிலிருந்து விலகிச் சென்றது தொடர்பாக சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த ஆராய்ச்சியை தொடர்ந்து மேற்கொள்ளப்படு வதற்காக உள்ள மாற்று சந்தர்ப்பங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தென்னை ஆராய்ச்சி சபையினால் 2017 ஆம் வருடத்திற்கு முன்பிலிருந்து நிறைவு செய்யப்பட்ட 17 செயற்திட்டங்களுக்காக தனியார் நன்கொடை யாளர்களிடமிருந்து மற்றும் தென்னை, பனை, ஊக்குவிப்பு மற்றும் தொடர்புடைய தொழில் துறை பொருட்களின் ஏற்றுமதியை பல்வகை படுத்தலுக்கான இராஜாங்க அமைச்சிடமிருந்து கிடைத்த பணத்தின் எஞ்சியுள்ள ரூபா 10,118,609 கட்டு நிதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித பணிகளுக்கும் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | ஏனைய செயலிழந்துள்ள செயல்திட்டங்களின் மீதிகளை நிறுவனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக எதிர்காலத்தில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | நிறைவு செய்யப்பட்டுள்ள செயற்திட்டங்களில் எஞ்சியுள்ள பணத்தை மீண்டும் அனுப்புதல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறொரு பணிக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒளித்தொகுப்பை அளவிடுவதற்கும் இலைகளின் வெப்ப நிலையை அளவிடுவதற்கும் மற்றும் புட்டிகாக்களின் நடத்தையை அளவிடுவதற்காக 2021 ஆம் வருடத்திலே சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 16,934,095 கிரயத்திலான ஒளிச்சேர்க்கை அளவிடும் சாதன உபகரனத்தின் (Photosynthesis meter) அளவீட்டு அலகுகளில் உள்ள (Flow meter) கோளாறினால் அது கொல்வணவு செய்யப்பட்டு ஒரு வருட காலத்திற்குள் மூன்று தடவைகள் பழுது பார்க்கப்பட்டிருந்ததுடன் மூன்றாவது தடவையில் அளவிட்டு அழகின் கோளாறு பழுது பார்ப்பதற்காக சபை ரூபா 704,557 தொகை ஒன்றை (டொலர் 1945) தேசிய முகவர் நிலையம் ஒன்றுக்கு செலுத்துவதற்கு பெருகை குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டு கொடுப்பனவை மேற்கொள்வதற்கு இருந்தது. இந்த உபகரணம் கொள்வனவு செய்தலின் முன்னைய பெறுகைகள் சந்தர்ப்பத்தில் இதற்கு சமமான உபகரணம் ஒன்று பாவிக்கப்படுகின்ற தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தகவல்களை கேட்டு அறிந்தபோது இந்த உபகரணம் அடிக்கடி திருத்தங்களை மேற்கொள்வதற்கு நேர்ந்துள்ளதாகவும் அதனால் அதன் உத்தரவாத காலத்தை 5 வருடங்கள் வரையும் நீடித்து பெற்றுக் கொள்ளுமாறும் அந்த பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்திருந்தும் சபையினால் உத்தரவாத | விலை மனு கோரப்படுதல் வரை காணப்பட்ட அனைத்து விவரக் குறிப்புகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் Micro tech Biological (pvt) Ltd. நிறுவனம் இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உத்தரவாத காலத்தை ஏற்றுக் கொள்வதற்கு நேர்ந்தது. கட்டமைப்பில் அடிக்கடி திருத்தங்களை மேற்கொள்வதற்கு நேர்ந்துள்ளதாகவும் உத்தரவு காலத்தை 5 வருடங்கள் வரை நீடித்து விண்ணப்பிக்கப்பட வேண்டியதாக கூறப்பட்ட போதிலும் அப்போதும் டெண்டர் பத்திரங்கள் கோறப்பட்டு இறுதியாக தொழில்நுட்ப குழு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. | நிறுவனத்தை கைவிட்டுச் சென்றிருந்த உத்தியோகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெருகைகள் தொடர்பாக பரிசீலனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு கவனக்குறைவு அல்லது விஷமத்தனம் ஒன்று இடம்பெற்று இருக்குமானால் பொறுப்பானவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

காலத்தை கூட்டி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமல் ஒரு வருட உத்தரவாத காலத்துடன் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அத்தோடு இந்த உபகரணம் கொள்வனவு செய்யப்படுகின்ற தொழில்நுட்ப குழு உறுப்பினர் ஒருவர் மற்றும் தாவர உடலியல் விஞ்ஞான பிரிவின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்ட சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் 2022 ஆம் வருடத்தில் சபையின் சேவையை கைவிட்டு விலகிச் சென்று இருந்தார். அதனால் இந்த இயந்திரத்தின் உச்ச பயன்பாடொன்றை பெற்றுக்கொள்ள முடியாது போனது என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் ஆராய்ச்சி பிரிவு 8க்குள் விவசாய பொருளாதார பிரிவின் மற்றும் தாவர உடலியல் விஞ்ஞான பிரிவில் ஒரு ஆராய்ச்சி உத்தியோகத்தர் வீத்மும் வீதமும் ஏனைய பிரிவுகளில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் 2 - 4 இக்கு இடையிலான அளவில் மாத்திரம் காணப்படுவதுடன் 5 பிரதான பிரிவு தலைவர் பதவிகளும், 3 பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பதவிகளும், 7 சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பதவிகளும், 1 ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவியும் வெற்றிடமாக காணப்பட்டது. நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்கு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக போதுமான அளவு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை காணப்படவில்லை என்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பொது முயற்சிகள் சுற்று நிறுவம் 2022/04 ஆம் இலக்க 2.4 பிரிவின் ஏற்பாடுகளின் ஊடாக காட்டப்பட்டுள்ளவாறு அத்தியாவசியமான வெற்றிடங்களுக்காக தேசிய பாதீட்டு திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஆட்சேர்ப்புக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள மையால் அதன் பிரகாரம் மேற்குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பதவி அணியினரின் தேவையை கவனத்தில் கொண்டு அத்தியாவசியமான பதிவுகளுக்காக ஆட்சேர்ப்புக்கு விசேட அங்கீகாரம் ஒன்று பெறப்படல் வேண்டும். |